









# ආනයන හා අපනයන පාලන දෙපාර්තමේන්තුව

## இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுத் திணைக்களம்

## Department of Imports & Exports Control

# செயலாற்றுகை அறிக்கை-2021

செலவின தலைப்பு - 296

## நிதி அமைச்சு

### இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)த் திணைக்களம்

**கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் தகவல்**



இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)த் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகமாக, 2021 ஆம் நிதியாண்டிற்குள் அடைந்து கொண்ட முன்னேற்றங்களை உள்ளடக்கிய செயலாற்றுகை அறிக்கை 2021 ஐ சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட இத் திணைக்களம் ''வளமான எதிர்காலம் ஒன்றினை நோக்கிய சூழல் மற்றும் பொதுமக்களைப் பாதுகாத்தல்'' போன்ற விரிந்த நோக்கினை அடைவதற்கு தேவையான இலக்குகளை பூர்த்தி செய்து கொண்டு நாட்டிற்கு பெருமைமிக்க சேவையினை வழங்குகிறது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்கு விதிமுறைகள் பொதுமக்கள் சுகாதாரம், தேசிய பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலையை உறுதிப்படுத்துவதனைப் போலவே சர்வதேச வர்த்தகத்திற்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதும் இத்திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு காலகட்டத்திற்குள் உலகலாவிய கொவிட்-19 தொற்றின் காரணமாக நாடு என்ற ரீதியில் பாரிய சவால்கள் பலவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இந்த இக்கட்டான சூழ்நிலைக்குள் 2021 ஆம் ஆண்டில் எமது திணைக்களத்தின் நோக்கு மற்றும் இலக்கினை நோக்கிச் செல்வதற்கு நான் உட்பட எனது பணிக்குழுவினர் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து அவற்றை வெற்றிகரமாக கடந்து மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள சேவையினை வழங்க முடிந்தமை இத்திணைக்களம் அடைந்து கொண்ட மாபெரும் வெற்றியாகும். குறிப்பாக இலங்கைப் பொருளாதாரத்தின் இறைமையாண்மை என்பதற்கு எதிராக அமெரிக்க டொலர் கட்டுப்பாட்டிற்காக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதி தொடக்கம் எமது திணைக்களத்தின் தலையீடானது சாதகமான மற்றும் சந்தர்ப்பவாதமும் ஆகும். இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் வரலாற்றில் என்றுமே இல்லாதவாறன செயற்பாட்டினை நிறைவேற்றி இலங்கை அரச பொருளாதாரத்தில் அந்நியச் செலாவணி விகிதத்திற்காக தாக்கத்தினைக் குறைப்பதற்குத் தேவையான பூரண ஒத்துழைப்பினை வழங்குவதற்கு இத்திணைக்களத்திற்கு முடியுமானது.

1977 ஆம் ஆண்டுடன் திறந்த பொருளாதாரக் கொள்கையுடன், இலங்கை இறக்குமதியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட பொருளாதார முறையினை நோக்கி மாறுபட்டது. அதன் இறுதிப் பிரதிபலனாக வர்த்தகக் கணக்கின் இருப்பு எதிர்மறையாக மாறியது மற்றும் வர்த்தகக் கணக்கு மீதி விரிவந்தது. இந்த இடை வெளியினை குறைப்பதற்கு பாரியளவில் வருடாந்தம் வெளிநாட்டவர்களிடம் இருந்து கடன் பெறவேண்டி ஏற்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த தற்போதைய சனாதிபதி அவர்களின் ''சுபீர்சமான நோக்கு'' கொள்கையின் பிரகாரம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதனை இலக்காக் கொண்டுள்ளது. ஏற்றுமதித் துறையினை ஊக்கப்படுத்தும் நோக்கினை முன்கூட்டியே உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக மூலோபாயத் திட்டங்களை அரசினால் தீட்டப்பட்டுள்ளது. அதற்கிடையில், உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு அவர்களது உற்பத்திகளை சந்தைப்படுத்துத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதனை முன்னிட்டு தேவையான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிமுறைகள் இத்திணைக்களத்தின் மூலம் வெளிவிடப்பட்டுள்ளது. அதனூடாக உள்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது.

பொதுமக்கள் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கின்ற சில உணவு பொருட்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பாம் எண்ணெய் தொடர்பில் மற்றும் பொதுச் சுகாதார மற்றும் சுற்றாடலைப் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்டு, முன்கூட்டியே தேசிய விவசாயக் கைத்தொழிலினை கட்டியெழுப்புவதற்காக காபனியப் பசளைப் பயன்பாட்டினை ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்டு இரசாயணப் பசளை, கிருமி

நாசினிகள் மற்றும் களைகொல்லிகள் தொடர்பான இறக்குமதியினைக் கட்டுப்படுத்து தொடர்பில் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பில் சமூகத்திற்குள் பெரும் பேச்சுக்குள்ளானது என்பது குறிப்பிடப்பட்டது.

எமது நுகர்வோர்களுக்கு செயற்திறனான மற்றும் வினைதிறனான சேவையினை வழங்குவதனை நோக்காகக் கொண்டு எமது திணைக்களத்தின் கட்டமைப்பு ரீதியாக மேம்படுத்தல்கள் சில ஆக்கபூர்வமாக செயற்படுத்தப்பட்டதனால் நுகர்வோர்களின் நன்றிகள் தொடர்பாக நான் பணிவுடன் திருப்தியடைகிறேன். அதுபோலவே தொற்றுநோய் நிலமையினைக் கட்டுப்படுத்துவதனை முன்னிட்டு சுகாதாரத் துறையினரால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுகாதார வழிகாட்டல் ஒழுங்கு விதிகளுக்கிணங்க ஊழியர்களின் சுகாதார நிலமைகளை சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதனை உறுதி செய்யும் முறையில் திணைக்களத்திற்குள் கடமை புரிவதற்கான சுகாதாரப் பாதுகாப்புச் சூழல் ஒன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அலுவல்களை வினைதிறனுடன் செயற்படுத்துவதற்காக தலைமைத்துவம் மற்றும் வினைதிறனான வழிகாட்டலைப் வழங்கிய நிதி அமைச்சர், நிதியமைச்சின் செயலாளர் உட்பட அதன் உத்தியோகஸ்தர்களுக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுளார் நாயகமாகிய நான், எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதியாக, இத்திணைக்களத்தின் செயலாற்றத்தினை அடைந்து கொள்வதற்காக அதிகபட்ச உதவியை எனக்கு வழங்கிய உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து நிர்வாகிகளுக்கும் என்னுடைய இதயங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ரீ.வீ.டீ. தமயந்தி கருணாரத்ன**
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டளர் நாயகம்

# உள்ளடக்கம்


**1 அத்தியாயம் - நிறுவனத்தின் சுயவிபரம் / செயற்படுத்தப்படுத்தப்படுவதன் சாராம்சம்** **01**
- 1.1 அறிமுகம் 01
- 1.2 திணைக்களத்தின் பார்வை, பணி, நோக்கு மற்றும் அடிப்படைப் பொறுப்புக்கள் 02
- 1.3 திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பிரதான செயற்பாடுகள் 03
- 1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு 04

**2 அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் முன்னோக்குப் பார்வை** **06**
- 2.1 2020 ஆம் ஆண்டுக்குள் பிடகடனப்படுத்தப்பட்ட புது ஒழுங்கு விதிகள் 06
- 2.2 இலங்கையில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் ஒழுங்கு முறைக் கொள்கைகளை மேம்படுத்தல். 12
- 2.3 இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் 17
- 2.4 கடந்த 5 வருட காலத்திற்குள் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான தகவல் 25
- 2.5 இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிக் கொடுப்பனவுகள் முறைகள் மற்றும் கட்டளைகள் 27

**3 அத்தியாயம் - வருடத்திற்கான முழு மொத்த செயலாற்றுகை** **29**
- 3.1 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று 29
- 3.2 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலமைகள் தொடர்பான கூற்று 30
- 3.3 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று 31
- 3.4 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை 32
- 3.5 ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை 33
- 3.6 நி.பி.208 பிரகாரம்,ஏனைய அமைச்சுக்கள்.்.திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் 33
- 3.7 நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடலின் செயலாற்றுகை 33
- 3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 35

**4 அத்தியாயம் - செயலாற்றுகைக் குறி** **46**
- 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறி (செயலாற்றுகைத் திட்டத்தின் பேரில்அடிப்படையிலானது) 46

**5 அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் (SDGs) அடைவுகளுக்கான செயலாற்றுகை** **47**
- 5.1 இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் 47
- 5.2 நிலையான அபிவிருத்தி இலக்கினைப் அடைவதன் மூலம் பெறக்கூடிய வெற்றி மற்றும் சவால்கள் 51

**6 அத்தியாயம் - மனித வள சுயவிபரம்** **53**
- 6.1 பணியாளர்களின் எண்ணிக்கை முகாமைத்துவம் 53
- 6.2 திணைக்களத்தின் செயலாற்றுகையினை முன்னிட்டு மனித வளத் தட்டுப்பாடு அல்லது மேலதிகத்தின் அச்சுறுத்தல் 53
- 6.3 மனித வள அபிவிருத்தி 53

**7 அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை** **56**

**முடிவுரைக் குறிப்பு** **65**

# 1 அத்தியாயம் - நிறுவனத்தின் சுயவிபரம் / செயற்படுத்துவதன் சாராம்சம்

## 1.1 அறிமுகம்

1969 ஆம் ஆண்டு முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)த் திணைக்களத்தின் மூலம் ''சுபீட்சமான நோக்கு'' போன்ற தற்போதைய அரச பொருளாதாரக் கொள்கையினை உள்ளடக்கிய இலக்கை முன்னிட்டு நிறைவேற்றி உள்ள செயற்பாடுகள் மிகையானது. நீண்ட வரலாற்றிற்கு உரிமை கோருகின்ற இத் திணைக்களம், நிகழகாலத்தில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் மாத்திரமன்றி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வியாபாரத்திற்கு வசதிகைளைச் செய்து கொடுக்கும் நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

அப்பொறுப்புக்களை இலக்காகக் கொண்டு செயற்படும் போது நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொதுச் சுகாதாரம் மற்றும் சூழல் தொடர்பாக கூடிய அவதானத்தைச் செலுத்தி திணைக்களத்தின் செயற்பணியின் பிரகாரம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்கு விதிமுறைகளுக்காக, கட்டுப்படுத்தப்பட வேண்டிய பொருட்களை இணங்கண்டு ஒழுங்கு விதிமுறைகளை உருவாக்குவதற்கும், சர்வதேச வியாபாரத்தில் இலங்கையின் அபிமானம் மற்றும் நுகர்வோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில இறக்குமதி செய்யப்பட்டும் பொருட்களுக்காக தரத்தினை அறிமுகப்படுத்துவதற்கும் நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தில், 2020 ஆம் முதல் கொவிட் -19 தொற்றின் தாக்கம் படிப்படியாக குறைந்து வருவதனால் அத்தியவசிய இறக்குமதி பொருட்களின் பேரில் விதிக்கப்பட்ட சிற்சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதற்கும் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டில் தயாரிக்கப்படும் சில பொருட்கள் மீது தொடர்ந்தும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்கவும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரைக்கும், வாடிக்கையாளர்கள் தொழிநுட்ப முறைமைகளை பயன்படுத்தி நிகழ்நிலை மூலமாக திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் விண்ணப்பங்களை சமர்பித்து உரிமம் பெறல், புதிய இறக்குமதியாளர்களை பதிவு செய்தல் மற்றும் மின்னணு முறையில் கட்டணம் செலுத்தல் தொடர்பாக அவசிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

திணைக்களத்திற்கு வருகை தருகின்ற நுகர்வோர்களுக்கு வினைதிறன் மிக்கதும் சிறந்த சேவையினை வழங்கும் வகையில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பெரும் அர்பணிப்போடு சேவையாற்றும் அதே வேளையில் நுகர்வோர்களுக்கு தேவையான தகவல்களை வழங்கும்போது குறைந்த கால இடைவெளியில் துள்ளியமான தகவல்கள் வழங்கும் வகையில் விசாரணை மையமொன்றை ஸ்தாபிபதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு வருகிறது.

## 1.2 திணைக்களத்தின் தூரநோக்கு, செயற்பணி மற்றும் அடிப்படைப் பொறுப்புக்கள்

### 1.2.1 தூரநோக்கு

வளமான எதிர்காலத்தை நோக்காக கொண்டு சூழலை மற்றும் பொதுமக்களைப் பாதுகாத்தல்

### 1.2.2 செயற்பணி

“நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொது மக்கள் சுகாதாரம், சூழல் பாதுகாப்பு போன்ற அனைத்தையும் கவனத்திற் கொண்டு, பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுகள் தொடர்பில் அரசினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்கள் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட (திருத்தப்பட்ட) இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச சட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தல்”

### 1.2.3 நோக்கங்கள்

நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்காக அரசினால் அவ்வப்போது எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு இணங்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்தல்.

## 1.3 திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பிரதான செயற்பாடுகள்

i. இறக்குமதிக் கட்டுப்பாட்டிற்கு உரிய ஒழுங்குமுறைகளை உள்ளடக்கிய வர்த்தமானிப் பத்திரிகையை பிரசுரித்தல்.

ii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு விதிமுறைகளின் கீழ் இந்நாட்டு பொருளாதாரத்தின் நன்மையினைக் கருத்திற் கொண்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை விநியோகித்தல்.

iii. மூலோபாய வர்த்தக முகாமைத்துவ முறைமை மற்றும் உலகலாவிய அனுமதிப் பத்திர விநியோக முறை ஒன்றினை உருவாக்குவது தொடர்பில் உரிய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

iv. மாண்ட்ரீல் நெறிமுறையின் படி ஓசோன் படலத்தைப் பாதிக்கின்ற வாயுக்களை இறக்குமதி செய்வதனைக் கட்டுப்படுத்துதல்.

v. இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்காக உலக வர்த்தக சங்கத்தினை முறைப்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்.

vi. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் மீதான செயற்பாட்டு அறிவுறுத்தல்களை வணிக வங்கிகளுக்கு விநியோகித்தல்.

vii. வர்த்தக ரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு முறைகளை பிரகடனப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

viii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப,அந்நியச் செலாவணிகள் செலவிடப்படாமை எனும் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகளுக்காக அனுமதி வழங்கல்.

ix. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் தொடர்பில் பிரச்சினைகள் தோன்றுகின்ற சந்தர்ப்பங்களில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டிற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்கல்.

x. உரிய அரச கட்டணங்களைச் சேகரித்து, ஒழுங்கிணைந்த நிதிக்கு வைப்புச் செய்தல்.

### 1.3.1 திணைக்களத்தின் தற்போதைய செயற்பாடுகள்

i. உள்நாட்டு நுகர்வோர்களுக்கு தரத்துடன் கூடிய பொருட்களைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளைச் செய்து கொடுப்பதற்காக தற்போது பிரகடனப்படுத்தப்பட்டு உள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நவீனமயப்படுத்தல் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை(தரம் மற்றும் தர நிர்ணய)அறிவித்தல்களைப் புதுப்பித்தல்.

ii. பூரண கப்பலுக்கு உட்செலுத்தப்படுவதற்கான பரிசோதனை சான்றிதழை விநியோகிக்கின்ற அதிகாரபூர்வமான பரீட்சகர்களின் எண்ணிக்கையினை

அதிகரித்தல் மற்றும் பரிசோதனை சான்றிதழை விநியோகிக்கின்ற செயற்பாடுகள் தொடர்பான வழிகாட்டுதல்களை ஒழுங்கமைத்தல்.

iii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் திறமைகள், ஆளுமைகள் மற்றும் ஆக்கபூர்வமான விருத்திக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் ஊழியர்களின் நலனோம்பலுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல.

iv. திணைக்களப் பயனாளிகளுக்கு சிறந்ததொரு சேவையினை வழங்குவதற்காக அவ்வப்போது நவீனமயமாகின்ற நிகழ்நிரல் அனுமதிப் பத்திரக் கட்டமைப்பு ஒன்றினை அமைத்தல். (Online Licensing System)

### 1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு

இத்திணைக்களம் நிதி அமைச்சின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிறுவனமாவதோடு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் அதன் பிரதானியாவார். கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பணிக்குழுக்கள் இணைந்திருப்பதோடு, அதன் நிருவாகக் கட்டமைப்பு கீழ்க் காணப்படும் பிரிவுகளைக் கொண்டு அமையப் பெற்றுள்ளது.

I. நிறுவனக் பிரிவு
II. கணக்குப் பிரிவு
III. ஆய்வுகள் மற்றும் கொள்கைகள் பிரிவு
IV. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
V. அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் பிரிவு
   - அலகு 1 – ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள்
   - அலகு 2 – பாவிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள்
   - அலகு 3 – இரசாயணப் பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொள்ளிகள் மற்றும் தொழில்நுட்ப மூலப்பொருட்கள்
   - அலகு 4 – தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள், மின் உபகரணங்கள்
   - அலகு 5 - ஏனைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி

VI. விசாரணைப் பிரிவு
VII. தகவல் தொழிநுட்பப் பிரிவு

திணைக்களத்திற்கு வருகை தருகின்ற பயனாளிகளுக்கு உயர் தரத்திலான சேவையினை வழங்குவதற்காக மற்றும் திணைக்களத்தின் அலுவல்களை செயற்திறன் மற்றும் வினைதிறனுடனான முறையில் மேற்கொள்வதன் பொருட்டு மேலே உள்ள பிரிவுகள் மூலமாக பல்வேறு செயற்பாடுகள் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

## ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு (Organizational Structure)



## 2. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் முன்னோக்குப் பார்வை

### 2.1 2020 ஆம் ஆண்டிற்குள் பிரகடனப்படுத்தப்பட்ட புதிய ஒழுங்கு விதிகள்

கோவிட்-19 தொற்றுப் பரவலின் மத்தியில் தேசிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக மற்றும் புனர்நிர்மாணத்தினை முன்னிட்டு 2021 ஆம் ஆண்டில் பல சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அச்சவால்களை வெற்றி கொள்வதற்காக அரசினால் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி இத்திணைக்களத்தின் மூலம் உன்னதமான செயற்பாட்டினைப் பூர்த்தி செய்துள்ளது.

கோவிட்-19 தொற்றுப் பரவலுக்கு மத்தியில் வெளிநாட்டு அந்நியச் செலாவணி நாட்டிற்குள் வருகின்ற விகிதத்தில் பாரிய வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. அதன் பிரகாரம், வெளிநாட்டுப் பணத்திற்குப் பதிலான உள்நாட்டு நாணயத்தின் (ரூபா.) அகப் பெறுமதி குறைவடைந்தது. அதனால், செலாவணி விகிதம் மற்றும் நிதிச் சந்தைக்கு ஏற்படுகின்ற தாக்கத்தினைக் குறைப்பதனை நோக்காகக் கொண்டு அரசினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு மத்தியில் அத்தியவசியப் பொருட்கள் இறக்குமதிக்காக மாத்திரம் இடமளித்தது விஷேடமானதாகும். மேலும், அரச கொள்கைகளின் பிரகாரம் செயற்பட்டு தேசிய பொருளாதாரத்தினை உறுதிப்படுத்தல், நவீனமயப்படுத்தலை முன்னிட்டு செலாவணி விகிதத்தை நிலைப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு, அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட தீர்வை வரி நிர்ணயக் குழுவின் பரிந்துரையின் பேரில் சில பொருட்களுக்காகக் காணப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதும், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்காக முதலீட்டுச் சபை அனுமதி வழங்கிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு அவசியமான பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியமையும் நிகழ்ந்தது.

“சுபீட்சமான நோக்கு” எனும் கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், இலங்கை விவசாயத்துறையின் அபிவிருத்திக்காக நச்சுத் தன்மையற்ற இயற்கை விவசாய பொருளாதாரம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கான களை கொல்லிகளின் இறக்குமதியினை ஒழுங்குபடுத்திக் கொண்டு ஒழுங்கு விதிமுறைகள் விதிக்கப்பட்டன.

இவையல்லாது, இணங்காணப்பட்ட பொருட்கள் இறக்குமதி கட்டுப்பாடின் கீழ் கொண்டுவருவதோடு கட்டுப்பாட்டின் கீழுள்ள பொருட்களின் கட்டுப்பாடுகளை நுகர்வோரின் தேவைக்கருதி தளர்த்தி இறக்குமதிகள் சீராக செய்ய அனுமதித்தல்.

#### 2.1.1 பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல்கள்

| தொடர் இலக்கம் | அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல்கள இலக்கம் | திகதி | விபரம் |
|---|---|---|---|
| 1. | 2209/18 | 2021.01.05 | உள்நாட்டு மட்டத்தில் தயாரிக்கப்படுகின்ற இனங்காணப்பட்ட ரயர்களின் அளவுகளில் சிலவற்றின் இறக்குமதிகளை தற்காலிகமாக இடைநிறுத்தல். |
| 2. | 2214/56 | 2021.02.11 | செரமிக் குளியலறைப் பாகங்கள் மற்றும் குழாய்களை கடன் அடிப்படையில் இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கல். |
| 3. | 2222/31 | 2021.04.06 | பாம் எண்ணெய் இறக்குமதியினை தடை செய்தல். |
| 4. | 2224/43 | 2021.04.23 | நடமாடும் வேலைத் தள வாகன இறக்கமதியினை ஒழுங்குபடுத்தல். |
| 5. | 2224/44 | | |
| 6. | 2226/48 | 2021.05.06 | இரசாயண உரவகைகள், கிருமி நாசினிகள் மற்றும் களை |

| | | | |
|---|---|---|---|
| | | | கொல்லிகளின் இறக்குமதியினைத் தடை செய்தல். |
| 7. | 2231/16 | 2021.06.11 | தங்க நகைகள் மற்றும் முகக் கவச இறக்குமதி அனுமதிப் பத்திரத்தைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரல். |
| 8. | 2231/17 | 2021.06.11 | ஒட்சிசன் மற்றும் சுவாச ஆதார உபகரண ஏற்றுமதியனை இடைநிறுத்தல். |
| 9. | 2231/18 | 2021.06.11 | இனங்காணப்பட்ட பொருட்களின் இறக்குமதிகளை தற்காலிகமாக இடைநிறுத்தல். |
| 10. | 2238/45 | 2021.07.31 | இயற்கை கனியம், கிலேடட் மற்றும் தாவரப் பகுதி ஊட்டச் சத்துக்கள் இறக்குமதி அனுமதிப் பத்திரத்தைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரல். |
| 11. | 2247/12 | 2021.09.29 | வெள்ளைச் சீனியின் மீது விதிக்கப்பட்டு இருந்த இறக்குமதி அனுமதிப் பத்திர அவசியத் தன்மையினை நீக்கல். |
| 12. | 2249/10 | 2021.10.11 | பயணிகள் மற்றும் பொருட்கள் இறக்குமதிக்காக பயன்படுத்தக் கூடிய அல்லது அதற்கு நிகரான இயந்திரத்தக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம். |
| 13. | 2252/30 | 2021.11.03 | அரிசியின் மீது தற்காலிக இறக்குமதித் தடையினை நீக்கல். |
| 14. | 2256/23 | 2021.11.30 | இரசாயணப் பசளை, கிருமி நாசினி மற்றும் களை கொல்லி இறக்குமதித் தடையினை நீக்கல், வழியினைத் தேடிக் கொள்ளும் உபகரண இறக்குமதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரல் மற்றும் க்லய்பொசெட் இறக்குமதியினைத் தடை செய்தல். |

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2209/18 – 2021.01.05 உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற இனங்காணப்பட்ட ரயர்களின் அளவுகளில் சிலவற்றின் இறக்குமதிகள் தற்காலிகமாக இடைநிறுத்தல்.**

உள்நாட்டு உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக மற்றும் கொவிட்-19 இன் எதிர்பாராத தாக்கத்திற்கு மத்தியில் சர்வதேச சந்தைக்கு மற்றும் நாணய மாற்று விகிதத்திற்கு ஏற்பட்ட தாக்கத்தினைக் குறைப்பதற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற ரயர்களின் எண்ணிக்கையில் சிலவற்றின் இறக்குமதியை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு உள்ளது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2214/56 - 2021.02.11 செரமிக் குளியலறை பாகங்கள் மற்றும் குழாய்கள் கடன் அடிப்படையில் இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளித்தல்.**

தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற செரமிக் குளியலறைப் பாகங்கள் மற்றும் குழாய்கள் உள்நாட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு போதுமாதாக இல்லாததால் அதுவரையில் இறக்குமதியினை தற்காலிகமாக தடை செய்யப்பபட்டு இருந்த அப்பொருட்கள், வழங்குநர்களிடம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற 180 நாட்களைக் கொண்ட கடன் அடிப்படையில் இறக்குமதிக்காக அனுமதி வழங்கப்பட்டது. மேலும், உள்நாட்டு பீங்கான் களிமண் வேலைப்பாடுகளுக்காக சந்தை ஒன்றினை நிர்மாணிப்பதற்காக பீங்கான் களிமண் வேலைப்பாட்டு இறக்குமதியினை தற்காலிகமாக தடை செய்யப்பபட்டு உள்ளது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2222/31 - 2021.04.06 –பாம் எண்ணெய் இறக்குமதியினை தடை செய்தல்.**

அதிமேதகு சனாதிபதி அவர்களின் சுபீட்சமான நோக்கின் பிரகாரம் உள்நாட்டு தென்னந் தோப்புக்களை வளச்சியடையச் செய்வதற்காக செம்பன்னைத் தோட்டங்களை மற்றும் பாம் எண்ணெய் இறக்குமதியினை தடை செய்தற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. மேலும், சுத்தீகரிக்கப்படாத பாம் எண்ணெய்யினைப் பயன்டுத்தி தயாரிக்கப்பட்ட உணவினை உட்கொள்வதனால் பொதுமக்கள் சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதாக சுகாதாரத்துறை நிபுணர்கள், உணவியலாளர்கள் போலவே உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகள் மூலம் சுட்டிக் காட்டியிருப்பது இத்தடை விதிப்பினை நடைமுறைப்படுத்துவதற்கான இன்னுமொரு காரணமாகும்.

இருப்பினும், அனுமதிக்கப்பட்ட தரத்திற்கு இணங்க பாம் எண்ணெய் வகை உணவுத் தயாரிப்பு கைத்தொழில் பயன்படுத்தப்படுவதோடு, உணவுத் தயாரிப்பிற்குத் தேவையான அவ்வாறான அனுமதிக்கப்பட்ட தரத்திற்கு இணங்க சுத்தீகரிக்கப்பட்ட, நிறமாக்கப்பட்ட மற்றும் வாசனை நீக்கப்பட்ட பாம் எண்ணெய் மற்றும் தயாரிப்பதற்கு அவசியமான சுத்தீகரிக்கப்படாத பாம் எண்ணெய், பாம் ஸ்டயரின் இறக்குமதி அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2224/43 மற்றும் 2224/44 - 2021.04.23 - நடமாடும் வேலைத் தள வாகன இறக்கமதியினை ஒழுங்குபடுத்தல்.**

இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களின் இறக்குமதிக்காக அறவிடப்படுகின்ற தீர்வை வரியின் அளவினை மேலும் குறைந்த அளவினை நடமாடும் வேலைத் தள வாகன இறக்கமதியினை ஒழுங்குபடுத்தல்.

இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களின் இறக்குமதிக்காக அறவிடப்படுகின்ற தீர்வை வரியின் அளவினை நடமாடும் வேலைத் தள வாகனங்களுக்காக அறவிடப்பட்டதனால், இறக்குமதி செய்யப்படுகின்ற நடமாடும் வேலைத் தள வாகனங்கள், இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களாகப் பதிவு செய்யப்பட்டதனால் சில விஷேட நன்மைகள் இறக்குமதியாளர்களுக்குக் கிடைப்பதாக மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அரச கணக்குகள் குழுவின் பரிந்துரையினைக் கருத்திற் கொண்டு இரட்டைப் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் நடமாடும் வேலைத் தள வாகனங்களுக்கு சமனான தீர்வை வரி அளவினை அறவிடுவதற்கு மற்றும் அதற்குச் சமனான ஆயுட்காலத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்வதற்காக நடமாடும் வேலைத் தள வாகனங்களின் இறக்குமதிக்காக புதிய ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீடு பிரசித்தப்படுத்தப்பட்டது.

நாட்டில் காணப்படுகின்ற கொவிட்-19 தொற்று நிலமைக்குள் தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாப்பதனை முன்னிட்டு நடமாடும் வேலைத் தள வாகனங்களும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்கு விதிகள் மூலம் இறக்குமதி நிறுத்தி வைக்கப்பட்டதனால், பிரசித்தத்தப்படுத்தப்பட்ட புதிய ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீடுகளையும் உள்ளடக்கிக் கொண்டு அவ் ஒழுங்கு விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது.

ஆயுட் காலம் 3 வருடங்களுக்குக் குறைந்த நடமாடும் வேலைத்தள வாகனங்களின் இறக்குமதி தற்காலிமாக இடைநிறுத்தப்பட்டதற்காக 2224/44 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையும், ஆயுட் காலம் 3 வருடங்களுக்குக் மேற்பட்ட நடமாடும் வேலைத் தள வாகனங்களின் இறக்குமதிப் பத்திரக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்து அதனை தற்போது இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கப்படாத பொருட்களின் பட்டியலில் உள்ளடக்குவதற்காக 2224/43 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை வெளியிடப்பட்டது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2226/48 - 2021.05.06 - இரசாயணப் பசளை, கிருமி நாசினி மற்றும் களை கொல்லி இறக்குமதியினைத் தடை செய்தல்.**

அதிமேதகு சனாதிபதி அவர்களால் விவசாய உற்பத்திகளுக்கான காபனீயப் பசளைப் பயன்பாட்டு மேம்படுத்தும் நோக்கில் இரசாயணப் பசளை, கிருமி நாசினி மற்றும் களை கொல்லிறக்குமதித் இறக்குமதியினைத் தடை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி அமைச்சரவையின் மூலம் அனுமதிக்கப்பட்டது. அதன் பிரகாரம், இரசாயணப் பசளை, கிருமி நாசினி மற்றும் களை கொல்லி இறக்குமதிக்காகப் பயன்படுத்தப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீடு இறக்குமதியினைத் தடை செய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டன. மேலும், அவ் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு மாற்றங்கள் ஏற்படாதவாறு உள்நாட்டு உற்பத்திக்குத் தேவையான இரசாயணப் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதனை நோக்காகக் கொண்டு இனங்காணப்பட்ட ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீடுகள் இறக்குமதி அனுமதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. அது தவிர இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையின் பிரகாரம், வழிகாட்டல் உபகரணம் (Navigational Apparatus) அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2231/16 - 2021.06.11 - தங்க நகைகள் மற்றும் முகக் கவச இறக்குமதியை இறக்குமதி அனுமதிப் பத்திரத்தைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரல்.**

வெளிநாட்டு அந்நியச் செலாவணியினை பாரியளவில் நாட்டை விட்டு வெளியேறிச் செல்கின்ற ஒரு வழியாக தங்க நகைகள் இறக்குமதி செய்யப்படுவது இணங்காணப்பட்டு உள்ளது. அவ்வாறு கட்டுப்பாடின்றி அந்நியச் செலாவணியினை நாட்டை விட்டு வெளியேறிச் செல்கின்றமை அந்நியச் செலாவணி விகிதத்திற்கு மற்றும் நிதிச் சந்தைக்கு எதிர்பாராத விதமாக தாக்கத்தினை ஏற்படுத்தவதனால் தங்க நகைகள் இறக்குமதி இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டு உள்ளது. மேலும், இறக்குமதிக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த முகக் கவசங்களுக்கான புதிய ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டதனால் அக்குறியீடும் இறக்குமதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு இவ் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2231/17 - 2021.06.11- ஒட்சிசன் மற்றும் சுவாச சுவாச ஆதார உபகரண ஏற்றுமதியனை இடைநிறுத்தல்.**

உலகம் பூராவும் பரவிய கொவிட்-19 தொற்றுடன் ஒட்சிசன் மற்றும் சுவாச ஆதார, இற்கான கேள்வி அதிகரித்துச் சென்றதனால் உள்நாட்டு ஒட்சிசன் வழங்கவதனைப் பாதுகாப்பதற்காக ஒட்சிசன் ஏற்றுமதியினை ஒழுங்குபடுத்தப்பட்டது. அதன் பிரகாரம், தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பரிந்துரையின் பேரில் மாத்திரம் ஒட்சிசன் மற்றும் சுவாச ஆதார ஏற்றுமதி செய்ய முடியும்.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2231/18 - 2021.06.11 - இனங்காணப்பட்ட பொருட்களின் இறக்குமதியினை தற்காலிகமாக இடைநிறுத்தல்.**

கொவிட் -19 தொற்றுக்கு மத்தியில் ஏற்பட்ட எதிர்பாராத பொருளாதார நிலமைகள் காரணமாக வெளிநாட்டு இருப்புக்கள் மற்றும் நிதிச் சந்தைக்கு ஏற்பட்ட தாக்கத்தினைக் குறைப்பதற்காக பொருட்களின் இறக்குமதியினை ஒழுங்குபடுத்துவதற்காக, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், தேசிய கைத்தொழில்களுக்கு மற்றும் பயன்பாட்டுக்க தொடர்ந்தேர்ச்சியான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக பொருட்களின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கு வகுக்கப்பட்ட செயற்பாடுகளை மீளாய்வு செய்தல், நிபந்தனைகளைத் தளர்த்தல், நீக்குதல் உட்பட அச்செயற்பாடுகளை திருத்தம் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டன. அதன் பிரகாரம், வழங்குநர்களுக்கு கடன் வசதிகளின் அடிப்படையின் பேரில் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த பொருட்கள் பட்டியலினை நீக்குதல் மற்றும் அப்பொருட்களை சாதாரண முறையில் இறக்குமதி செய்வதற்கு இடமளித்தல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய உற்பத்திகள், பிளாத்திக் பொருட்கள், செரமிக் பொருட்கள், வாகனங்கள் மற்றும் மரத்தாலான உற்பத்திகளை இறக்குமதியினை கட்டுப்படுத்துவதனை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்காக மேலே குறிப்பிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2238/45 - 2021.07.31- இயற்கைக் கனியம், கிலேடட் மற்றும் தாவரப் பகுதி ஊட்டச் சத்துக்களின் இறக்குமதியினை அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரல்.**

அதிமேதகு சனாதிபதி அவர்கள் மூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இரசாயணப் பசளை, கிருமி நாசினி மற்றும் களை கொல்லிகளின் இறக்குமதியினைத் தடை செய்வதற்கான திட்டங்களுக்கு அமைச்சரவை மூலம் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2226/48 இலக்கம் கொண்ட மற்றும் 2021.05.06 ஆந் திகதி கொண்ட அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் மூலம் அப்பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டது. இருப்பினும், இத்தடையினை நடைமுறைப்படுத்தப்படும் போது எழுந்த பிரச்சினைகள் காரணமாக மற்றும் தாவரங்களின் வளர்ச்சிக்காக அவசியமான தாவர ஊட்டச் சத்துக்களைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் அதாவது, இயற்கைக் கனியம், கிலேடட் மற்றும் தாவரப் பகுதி ஊட்டச் சத்துக்களின் இறக்குமதிக்கு இடமிப்பதற்காக 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிய 2238/45 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் மூலம் அவ் ஒழுங்குவிதிமுறைகள் திருத்தம் செய்யப்பட்டது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2247/12 - 2021.09.29 - வெள்ளைச் சீனியின் மீது விதிக்கப்பட்டு இருந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திர அவசியத் தன்மையினை நீக்கல்.**

அதிமேதகு கௌரவ சனாதிபதியினால் முன் வைக்கப்பட்ட, வாழ்வாதாரச் செலவினை நிலையாக வைத்துக் கொள்வதற்காக தேவையான கொள்கைசார் மற்றும் நடைமுறை ரீதியான தீர்வினை வழங்குவதற்காக அமைச்சவரைத் திட்டங்களின் தீர்மானங்களின் பிரகாரம் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப துணைக் குழுச் சபை ஒன்று நியமிக்கப்பட்டது. நியமிக்கப்பட்டதன் பிரகாரம், சீனி உட்பட அத்தியவசிய உணவுப் பொருட்களை வழங்குதில் காணப்படுகின்ற தட்டுப்பாட்டின் பேரில் விலைகள் அதிகரித்துச் செல்கின்ற தன்மை ஒன்று காணப்படுவதனால் அத்துணைக் குழு சபையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டது. அதன் பிரகாரம், இறக்குமதியாளர்களுக்கு இறக்குமதி செய்து தட்டுப்பாடின்றி சந்தைக்கு சீனியினை விநியோகிப்பதற்காக சீனி இறக்குமதிக்காக விதிக்கப்பட்டு இருந்த இறக்குமதிக் அனுமதிப் பத்திர கட்டுப்பாட்டினை நீக்குவதற்காக அத்துணைக் குழு சபையின் தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்தீர்மானங்களை நடைமறைப்படுத்துவதற்காக வெள்ளைச் சீனியின் மீதான கட்டுப்பாட்டினை நீக்குவதற்காக மேலே காணப்படுகின்ற அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. மேலும், உள்நாட்டு சிவப்புச் சீனி உற்பத்திக்காக வசதிகளை மேற்கொள்ளும் எண்ணத்தில் சிவப்புச் சீனி இறக்குமதி மேலும் இறக்குமதி அனுமதிக் கட்டுப்பாட்டு முறையின் கீழ் வைத்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2249/10 - 2021.10.11 - பயணிகள் மற்றும் பொருட்கள் இறக்குமதிக்காக பயன்படுத்தக் கூடிய அல்லது அதற்கு நிகரான இயந்திரத்தக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம்.**

2020.12.14 ஆம் திகதிய 2206/5 இலக்கம் கொண்ட 2020.12.14 அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் மூலம் பயன்படுத்தப்பட்ட பயணிகள் மற்றும் பொருட்களின் இறக்குமதிக்காக பயன்படுத்தக் கூடிய அல்லது அதற்கு நிகரான படகுகள் மற்றும் பயணத்திற்கான படகுகளின் இறக்குமதிப் பத்திரக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதனால், படகுகள், இறக்குமதி அனுமதிப் பத்திர

வநியோகத்திற்காக அறவிடப்பட வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணத்தைப் பிரகடனப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதிய 2249/10 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல.2252/30 – 2021.11.03 – அரிசியின் மீது காணப்பட்ட தற்காலிக இறக்குமதிக் கட்டுப்பாட்டினை நீக்கல்.**

உள்நாட்டின் அரிசிக்கான தேவையினைப் பூர்த்தி செய்வதற்காகவும் சந்தையில் காணப்படுகின்ற அரிசிக்கான தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்து, மக்களுக்குத் தேவையான அரிசியினை தட்டுப்பாடின்றி குறைந்த விலைக்கு பெற்றுக் கொடுப்பதற்காகவும் தேவையான வசதிகளை வழங்குவதற்கு அரசு செலுத்தியுள்ளது. அதன் பிரகாரம், அரிசி (சம்பா, நாடு மற்றும் சிவப்பரிசி) மீது காணப்பட்ட தற்காலிக இறக்குமதிக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது.

**அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் இல 2256/23 - 2021.11.30 - இரசாயணப் பசளை, கிருமி நாசினி மற்றும் களை கொல்லி இறக்குமதித் தடையினை நீக்கல், வழியினைத் தேடிக் கொள்ளும் உபகரண இறக்குமதிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரல் மற்றும் க்லய்பொசெட் இறக்குமதியினைத் தடை செய்தல்.**

அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 21/0746/301/013 இலக்கம் மற்றும் 2021.04.27 ஆந் திகதிய தீர்மானத்தின் பிரகாரம் இரசாயணப் பசளை, கிருமி நாசினி மற்றும் களை கொல்லி இறக்குமதித் தடையினை தடையினை நீக்குவதற்காக 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட (திருத்தப்பட்ட) இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச சட்டத்தின் பிரகாரம் இறக்குமதிகள் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் 2226/48 இலக்கம் மற்றும் 2021.05.06 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டதோடு, இயற்கை கனியம், கிலேடட் மற்றும் தாவரப் பகுதி ஊட்டச் சத்துக்களின் இறக்குமதிக்காக அனுமதி வழங்குவதற்காக 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிய 2238/45 இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் மூலம் அவ் ஒழுங்கு விதிகள் திருத்தம் செய்யப்பட்டது. அதன் பிற்பாடு, 2021.11.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் 2226/48 இலக்கம் மற்றும் 2021.05.06 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலை உடனடியாக அமுல்படுத்ததுவதற்கான இரத்துச் செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதோடு, அத்தீர்மானம் இவ் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மேலும், க்லய்பொஸேட் மனிதர்களது சுகாதாரத்திற்கு கேடு விளைவிப்பதனால் க்லய்பொஸேடின் இறக்குமதியினை தடை செய்வதற்கு மற்றும் இலங்கை தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையின் கடற்படை பிரயாண வழிகாட்டி உபகரணங்கள் இறக்குமதி அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டது.

**2.1.2 செயற்பாட்டு ஆலோசணைகள் மற்றும் உள்ளகச் சுற்றறிக்கைகள் விநியோகித்தல்.**

திணைக்களத்தினால் வருடத்திற்குள் வெளியிடப்பட்ட வர்த்தமானி பத்திரிகை அறிவித்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பில் இலங்கை சுங்கமானது, அனைத்து வணிக வங்கிகள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களினதும் தெளிவு பெற்றிருப்பது மிக முக்கியமாகும்

வர்த்தமானி பத்திரிகை அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்ட ஒவ்வொரு தடவையும் அதற்குரிய செயற்பாட்டு ஆலோசனைகளை வெளியிடல் மற்றும் உள்ளகச் சுற்றறிக்கைகளை வெளியிடல் திணைக்களத்தின் பிராதன பொறுப்பாகும். அதன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு திணைக்களத்தின் மூலம் செயற்பாட்டு ஆலோசனைகள் 28 மற்றும் உள்ளகச் சுற்றறிக்கைகளை 15 வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது.

## 2.2 இலங்கையில் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் ஒழுங்கு முறைக் கொள்கைகளை மேம்படுத்தல்.

இலங்கையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்கு விதிமுறைக் கொள்கைகளை மேம்படுத்தல் மற்றும் அக்கொள்கைகளை மேம்படுத்துவதற்கான பிரதான நிறுவனமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் கீழ்வருமாறாகும்.

### 2.2.1 இறக்குமதிகள் (தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டு)க் கட்டளைகள்

உள்நாட்டு நுகர்வோர்களுக்கு உயர் தரத்திலான மற்றும் சிறந்த தன்மையுடன் கூடிய பொருட்களைப் பயன்படுத்துவதற்கான கதவினைத் திறந்து இறக்குமதிப் பொருட்கள் இலங்கைத் தரத்திற்குப் பொருந்தக் கூடியவையாக இருக்க வேண்டியது கட்டாயப்படுத்தி மற்றும் புதுப்பித்து நிறுவனத்தின் (தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டு) வர்த்மானிப் பதிதிரிகை அறிவித்தலானது காலத்திற்குக் காலம் வெளியிடப்படும்.அதன் பிரகாரம்,தற்போது நடைமுறையில் காணப்படுகின்ற 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதிய 2064/34 இலக்கம் கொண்ட இறக்குமதிகள் (தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டு) அதி விஷேட வர்த்மானிப் பதிதிரிகை அறிவித்தலைத் திருத்துவதற்கு உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

அவ்வாறு தரப்படுத்தல் மற்றும் தர நிர்ணயக் கட்டிப்பாட்டிற்கு இணங்க வேண்டிய இறக்குமதிப் பொருட்கள் சில இனங்கண்டு மற்றும் உரிய தரப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் திட்டங்களைப் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளன.அதன் பிரகாரம்,முன் வைக்கப்பட்டுள்ள அனைத்துத் திட்டங்களும் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலில் உள்ளடக்குவதற்காக காணப்படுகின்ற முடியுமான தன்மை தொடர்பாக பல்வேறுபட்ட அரச நிறுவனங்கள், வர்த்தக சபைகள் மற்றும் வர்த்தக வங்கிகளுடன் கலந்துடையாடப்பட்டதன் பிற்பாடு அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் வரைவுகள் செய்யப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் காலங்களில் அவை பிரசுரிப்பதற்கான அலுவல்கள் திட்டமிடப்பட்டு உள்ளன.

மேலும், திரவ பெற்றோலிய வாயு (LP Gas) சார்ந்த விபத்துக்கள் பல நிகழ்ந்துள்ளதனால், இவ்வருட அரை இறுதிப் பகுதிகளில் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் இருந்து பதிவாகியுள்ளன. வீட்டுப்பாவனைக்காக திரவ பெற்றோலிய வாயுப் பயன்பாடு தொடர்பான நம்பிக்கை குறைந்து சென்றுள்ளது. திரவ பெற்றோலிய வாயு மற்றும் அதன் துணை உதிரிப் பாகங்கள் தரத்திற்கு இணங்கியதாக உரியவாறு ஒழுங்குபடுத்துவதற்குத் தேவை தற்போதைய அவசியத் தேவையாகத் தோன்றியுள்ளது. அதனால், தரத்திற்குக் குறைந்த திரவ பெற்றோலிய வாயு மற்றும் துணை உதிரிப் பாகங்களின் இறக்குமதி செய்வது தொடர்பில் தரப் பரிசோதனை செய்தல் முறைமை ஒன்றினை நிர்மாணிப்பதற்கு இலங்கை தர நிர்ணய நிறுவனம் உட்பட உரிய தரப்பினர்களின பங்குபற்றலுடன் இதுவரையில் இத்திணைக்களத்தின் அனைத்து விதமான தலையீட்டுடன் தேவையான அலுவல்கள் துரித கதியில் மேற்கொளள்ப்பட்டு வருகின்றன.

### 2.2.2 ஐக்கிய நாடுகளின் அமைப்பான பாதுகாப்புச் சபையின் 1540 கொண்ட திட்டங்கள் இலங்கைக்குள் நடைமுறைப்படுத்தல்.

ஐக்கிய நாடுகளின் அமைப்பான பாதுகாப்புச் சபையின் 1540 கொண்ட திட்டங்கள் நாட்டிற்குள் நடைமுறைப்படுதுவதற்காக 1540 இனை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்துவதற்காக கொள்கை ரீதியான அனுமதியினை 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி அமைச்சரமையினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது.அவ் அனுமதியின் பிரகாரம்,இவ் 1540 கொண்ட திட்டங்கள் வினைதிறன் மிக்க அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்காக சட்ட மன்றக் குழு மற்றும் தொழிநுட்பக் குழுவாக அமைத்து,அரச நிறுவனங்களைக் கொண்ட இரட்டைக் குழு அமைச்சரவையின் அனுமதியுடன் நியமிக்கப்பட்டு உள்ளது

அதன் சட்ட மன்றக் குழுவின் மூலம் இலக்கம் 1540 கொண்ட திட்டங்களை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்துவதற்காக சட்டமானது போதுமானதாக இல்லாததால்,சட்ட ஆலோசனைக் குழுவின் சிபாரிசின் படி,தேவையான சட்டங்களை வரைவுகளாக்குவதோடு, இதுவரையில் புதிய மூலோபாய வர்த்தக முகாமைத்துவச் சட்டம் ஒன்று திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டில் வரைவுகள் செய்யப்பட்டது. அவ்வரைவுகள் மேலே குறிப்பிடப்பட்ட குழுக்களின் காணப்படுகின்ற அங்கத்தவர்களில் விஷேட அறிவு உள்ளவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தேசிய மூலோபாயப் பொருட்கள் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுப் பட்டியலைத் தயாரிப்பதற்காக பயன்படுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றது.அதன் பிரகாரம் தொழிநுட்பக் குழுவின் ஆலோசணையின பேரில் அப்பட்டியல் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்படுவதற்கான அலுவல்கள் தற்போதும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. 2022 ஆம் ஆண்டில் அவற்றைப் பூர்த்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டு உள்ளது.

### 2.2.3 பூரண கப்பல் ஏற்றப்படுவதற்கான சோதனைச் சான்றிதழ் (Pre-Shipment Inspection Certificate)

பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யும் பூரண கப்பல் ஏற்றப்படுவதற்கான சோதனைக்காக உட்படுத்தப்பட வேண்டியதோடு, அதற்காக பூரண ஏற்றுமதி சோதனைச் சான்றிதழ் பெறக்கூடிய நிறுவனங்கள் எவை என்பதனை உள்ளடக்கி 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்டது.

அவ்வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள சோதனை நிறுவனங்கள் மூலம் பூரண கப்பல் ஏற்றப்படுவதற்கான சோதனைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதன் அடிப்படையில் ஒருமுகப்பட்டு உள்ள ஏகபோக காரணத்தால் சேவைகளை வழங்கும் போது ஏற்படுகின்ற சிரமங்களைக் கருத்தி கொண்டு தமது நுகர்வோர்களுக்கு வினைதிறன் மிக்க மற்றும் சிறந்த சேவையினை வழங்கம் நோக்கில் அதிகாரம் பெற்ற சோதனை நிறுவனங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினூடாக அச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் அதிகாரம் பெற்ற முகவர் நிறுவனங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்குத் தேவையான வர்த்தமானி அறிவித்தல்கள் வரைவுகள் செய்யப்பட்டு அதிகாரம் பெற்ற முகவர் நிறுவனங்கள் சிலவற்றுடன் தொடர்பாக மேலும், இலங்கை அங்கீகார சபையுடன் அலுவல்களை ஒழுங்குபடுத்திக் கொண்டுள்ளன.

அதன் பிரகாரம், இவ்வர்த்தமானிப் வாகன இறக்குமதியாளர்கள் மற்றும் அவற்றைக் கொள்வனவு செய்கின்ற நுகர்வோர்களைப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகள் உள்ளது என்பதனை குறிப்பிடலாம்.

### 2.2.4 இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வியாபாரத்திற்காக வசதிகளைச் செய்து கொடுத்தல்.

#### 2.2.4.1 மக்கள் பிரகடனம் (Citizen's Charter)

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கீழ் நடாத்திச் செல்லப்படுகின்ற சேவைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய நுகர்வோர்களை தெளிவுபடுத்துவது மிகவும் முக்கியமானதாகும். நாட்டின் சாதாரண பொது மக்களுக்கு உரிய அரச நிறுவனங்களின் மூலம் பெற்றுக்

கொள்ளக் கூடிய சேவைகள் தொடர்பாகவும் அந்நிறுவனங்கள் தொடர்பான அனைத்து விதமான தகவல்களையும் ஆவணப்படுத்தி இவ்வழிகாட்டல் ஒழுங்குபடுத்தப்பட்டு உள்ளது. நுகர்வோர்களுக்கு மிகவும் வினைதிறன் மற்றும் ஆக்கபூர்வமான சேவையினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அச்சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன் வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்படங்கள் மக்கள் பிரகடனத்தினை நவீனமயப்படுத்துவதற்காக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அதன் மூலம் திணைக்கத்தினால் ஏதேனும் சேவை ஒன்றினைப் பெற்றுக் கொள்ளும் போது செயற்பட வேண்டிய முறை மற்றும் முன் வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக தெளிவான விளக்கம் ஒன்றினைப் பெறுவதன் மூலம் வினைதிறன் மிக்க சேவை ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் கிடைக்கும். அதன் பிரகாரம், நிறுவனத்தின் மக்கள் பிரகடனத்தினை நவீன மயப்படுத்துவதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.4.2 கரை நிரல் அல்லது கருப்பு நிரற் பட்டியல் (Black List)

நாட்டின் பாதுகாப்பு, பொது மக்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான சூழல் ஒன்றினை உறுதிப்படுத்துவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் ஒழுங்கு விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள தரங்களுக்கு இணங்காத பொருட்களை இறக்குமதி செய்கின்ற இறக்குமதியாளர்களின் பட்டியல் ஒன்றினை பிரசித்தப்படுத்துவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் ஒழுங்கு விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன. அதன் பிரகாரம், அவ்வாறான இறக்குமதியாளர்களை பிரசித்தப்படுத்துவதல் முறைமை ஒன்றினை உள்ளடக்கிய விதிகள் வரைவு உள்ளடக்கத்தினை திணைக்களத்திற்கு முன் வைக்கப்பட்டு உள்ளன. அத்திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்படுகின்ற பரிந்துரையின் பிரகாரம் 2022 ஆம ஆண்டில் முன்னோக்கு அலுவல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டு உள்ளது.

### 2.2.4.3 வழிகாட்டல் கோவையினை நவீன மயப்படுத்தல். (Updating the Guideline)

திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகளை வினைதிறன் மிக்கதாக மற்றும் செயற்திறனாக மேற்கொள்வதற்கு வழிகாட்டல் கோவை மிகவும் உறுதுணையாக உள்ளது. விஷேடமாக திணைக்கள சேவைக்காக இணைக்கப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறான வழிகாட்டல் கோவையின் மூலம் கடமையினைப் புரிவதற்கு உரிய அறிவினைப் பெற்றுக் கொள்ளலாம்.

அதனால் இதற்கு பல வருடங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட வழிகாட்டல் கோவையின் தற்போது திணைக்களத்தின் மூலம வெளியிடப்பட்டு உள்ள வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் மற்றும் வெளியிடப்பட்டு உள்ள செயற்பாட்டு ஆலோசணை சுற்று நிரூபங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைத் தேவைகளின் பிரகாரம் புதுப்பித்தலை மேற்கொள்ள முடியும் என இனங்காணப்பட்டு உள்ளது.

அதன் பிரகாரம், உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் வழிகாட்டல் கோவையினை மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டதோடு, அக்குழுவின் திட்டங்களின் பிரகாரம் அவற்றிற்கு திருத்தங்கள் சேர்க்கப்பட்டன. மேலும் இதுவரையில் அலகுகளின் மூலமும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் நிகழ்நிரல் முறையினுர்டாக மேற்கொள்வதற்கு

ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் அதற்குத் தொடர்பானதாக வழிகாட்டல் கோவையில் உள்ளடங்குகின்ற அலகுகளின் செயற்பாடுகள் மற்றும் அலகுகளின் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் திருத்தம் செய்யப்பட்டன.

அதுபோலவே கொள்கை அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் ஒனறுக்காக 2021 ஆம் அண்டில் பல கூட்டத் தொடர்களை நடாத்துவதற்கு ஏற்பட்டதோடு, அதில் திணைக்களத்தில் கடமை புரிகின்ற அனுபமிக்க உத்தியோகத்தர்கள் மூலம் முன் வைக்கப்பட்ட பல்வேறுபட்ட கருத்துக்கள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடலுக்காக அதிகமான நேரத்தினைச் செலவிடப்பட வேண்டி ஏற்பட்டது. அதன் பிரதிபலனாக கொள்கைகள் அலகின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற கீழ்க் காணப்படும் செயற்பாடுகளை மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டு வழிமுறை மிகவும் சரியான விதத்தில் மீள் திருத்தம் செய்யப்பட்டது.

- வெளிநாட்டு அந்நியச் செலாவணி செலவாகாத அடிப்படையின் பேரில் பொருட்களை இறக்குமதி செய்தல்.
- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை ஒழுங்குபடுத்தல்.
- கணக்காய்வு விசாரணைக்காக பதில்களை வழங்குதல்.
- திணைக்களத்திற்கு எதிராக இறக்குமதியார்கள் மூலம் ஆவணப்படுத்தப்பட்ட ஒழுங்க விதிச் சட்டச் செயற்பாடுகள் தொடர்பாக செயற்படல்.
  இவை தவிர கணக்கு மற்றும் நிருவாக அலகுகளின் மூலம் மேற்கொ்ளப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக மேலும் கலந்துரையாடி அவ்வலககளின் செயற்பாடுகளும் மீள் திருத்தங்கள் செய்வதற்கு உள்ளாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் கணினிகளுக்காகவும் வழிகாட்டல் கோவையினை பிரசுரிப்பதற்கு விதிக்கப்பட்டு உள்ளது.

### 2.2.4.4 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளுக்கான அனுமதி வழங்கப்படும் போது சிபாரிசினை வழங்கக் கூடிய நிறுவனங்களை இனங்காணல் (Recommending Authorities)

அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படுகின்ற பொருள் ஒன்றுக்காக அனுமதிப் பத்திரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்திற்கு முன் வைக்கப்பட வேண்டியது எந்நிறுவனத்தினது சிபாரிசு என்பது தொடர்பாக திணைக்கள உத்தியோகத்தர்கள் போலவே, நுகர்வோர்களும் தெளிவு பெற்றிருப்பது அத்தியவசியமாகும்.

அதன் பிரகாரம், திணைக்களத்தின் செயற்பாடுகள் மிகவும் சிறப்பாக மற்றும் வினைதிறன் மிக்கதாக நடாத்திச் செல்வதற்காக பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு இலக்கங்களிற்கு உரித்தான பொருட்களுக்கான சிபாரிசினை வழங்கக் கூடிய நிறுவனங்கள் எவை என்பன பற்றி உள்ளடக்கிய பட்டியல் ஒன்றினை தயாரிப்பதற்கான தேவையினை இனங்கண்டு கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம், மிகவும் சரியான வழிகாட்டல் ஒன்றினை வழங்கும் நோக்கடன் 2020 ஆம் ஆண்டில் இது தொடர்பாக தெளிவு பெற்ற உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழுவினை நியமித்ததோடு, அக்குழுவினால் ஒவ்வொரு ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு இலக்கம் உரித்தான பொருட்களுக்கான சிபாரிசினை வழங்கக் கூடிய

நிறுவனங்களை இனங்கண்டு தற்பொழுது பட்டியல்படுத்தப்பட்டுள்ளதோடு, 2021 ஆம் ஆணடில் பிரசுரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.4.5 ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு வழிகாட்டி (Consolidated H.S.Guide)

திணைக்களத்தின் மூலம் இனங்காணப்பட்ட பொருட்களின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதனை முன்னிட்டு அவ்வப்போது வர்த்தமானி அறிவித்தல்கள் பிரசுரிக்கப்படுகின்றன. அவ்வாறு பிரசுரிக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களில் இறக்குமதி அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் (ICL), இறக்குமதி தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ள பொருட்கள் (TS), இறக்குமதி அனுமதிப் பத்திரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு, அனுமதிப பத்திர விநியோகம் இடைநிறுத்தப்பட்டு உள்ள பொருட்கள் (SL) மற்றும் இறக்குமதித் தடை விதிக்கப்பட்டு உள்ள பொருட்கள் (B) எனக் காட்டப்பட்டு உள்ளது. ஒரு தடவை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாகக் காணப்படுகின்ற வரையறைகளை இனங்காண்பதற்கு பல வர்த்தமானி அறிவித்தல்கள் பரீட்சிக்க வேண்டி ஏற்படுகின்றது. அந்நடைமுறை ரீதியான சிக்கல்களை இனங்கண்டு கொண்ட இத்திணைக்களம் தன்னுடைய நுகர்வோர்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற அசௌகரியங்களை போக்கவதனை இலக்காகக் கொண்டு அவ்வாறு இதுவரையில் பிரசுரிக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களில் உள்ளடக்கப்பட்டு உள்ள வரையறுக்கட்ட பொருட்கள் மற்றும் அவற்றிற்கு உரிய ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு வழிகாட்டல் ஒழுங்குபடுத்தப்பட்டு உள்ளது. அதன் மூலம் திணைக்களத்தின் நுகர்வோர்களைப் போலவே திணைக்களத்தில பணி புரியும் உத்தியோகத்தர்களுக்கும் மிகக் குறுகிய காலத்தில் தனக்குத் தேவையான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை சுங்கம் மற்றும் அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் வசதிகளைச் செய்து கொடுக்கும் போது தமது செயற்பாடுகளை மிக இலகுவாக மற்றும் வினைதிறன் மிக்கதாக நிறைவேற்றுவதற்கு இதன் மூலம் வழிவகை செய்து கொடுக்கப்பட்டு உள்ளது.

### 2.2.4.6 நவீன விண்ணப்பப் படிவ மாதிரிகளை அறிமுகம் செய்தல்.

நுகர்வோர்களக்கு கொள்கை அலகின் மூலம் வினைதிறன் மிக்க மற்றும் மிகச் சரியானதாகவும் தன்னுடைய சேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதனை இலகுபடுத்திக் கொள்வதனை இலக்காகக் கொண்டு அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்களுக்கு உரியதாக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள புதிய விண்ணப்பப் படிவ மாதிரி ஒன்றினை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு,அவ் விண்ணப்பப் படிவங்கள் திணைக்கள இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்குத் தேவையான வசதிகள் தற்போது மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

- P1 – உரிய கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் வரவேற்பின் பேரில் ஆவணம் / திறந்த கணக்கின் பேரில்
- P2 – அந்நியச் செலாவணி செலவாகாத அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகள்
- P3 – முற்கொடுப்பனவுகள்
- P4 – மின்னஞ்சல் மற்றும் கடன் கடிதங்கள் மூலம் பணம் செலுத்துதல்.
- P5 – முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில்களில் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட பொருட்களை விடுவித்தல்.

P6 – மீன் ஏற்றுமதி
P7 – வாகன இறக்குமதியின் போது ஏற்படுகின்ற சிரமங்கள்

**2.2.4.7 சேவைகளை நிகழ்நிரல் முறைமையின் கீழ் நடைமுறைப்படுத்தல்.**
நாட்டிற்குள் காணப்படுகின்ற கொவிட்- 19 நிலமை காரணமாக நுகர்வோர்களுக்கு தமது சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்திற்கு வருகை தரும் பல சிக்கல்களுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அவ்வாறான சூழ்நிலையில் இணையத்தினைப் பயன்படுத்தி நிகழ்நிரல் முறையினுர்டாக விண்ணப்பிப்பதற்கு மற்றும் அவற்றிற்கு உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் புதிய இறக்குமதியாளர்களைப் பதிவு செய்வதற்கும் சந்தர்ப்பத்தினை உருவாக்கிக் கொடுக்க முடியுமானது கூட பாரிய வெற்றியாக அமைந்தது.

